ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2368/25 - 2024 ජනවාරි මස 26 වැනි සිකුරාදා - 2024.01.26
2368/25 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

**ரணில் விக்கிரமசிங்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இப்பிரகடனத்தின் மூலம் இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு சனவரி மாதம் இருபத்து ஆறாம் நாளன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றது என்பதையும், பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரின் ஆரம்பமானது, இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு பெப்புருவரி மாதம் ஏழாம் திகதி மு.ப. 10.30 மணியாக நிர்ணயிக்கப்பட்டு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்றக் கூட்ட மண்டபத்தில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கப்படுகின்றது என்பதையும் இத்தால் சகலரும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பி. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 01-0215

1A - G 41317 — 361 (2024/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*